# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • அக்டோபர் 29 2022 Weekly E-paper • October 29, 2022



## தாய் மொழியைக் காப்போம்! எம்மொழித் திணிப்பையும் எதிர்ப்போம்!!

சுப.வீரபாண்டியன்

### இங்கிலாந்துப் பிரதமரும் இந்தியப் பார்ப்பனர்களும்

மா.உதயகுமார்

### அண்ணாமலையின் வாய்ச்சவடால் !

தலையங்கம்

### 'நாகபுரி' நோக்கி ஒரு சிற்றுலாப் பயணம்!

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● அக்டோபர் 29 2022 Weekly E-paper ● October 29, 2022

# தாய் மொழியைக் காப்போம்! எம்மொழித் திணிப்பையும் எதிர்ப்போம்!!

**சுப.வீரபாண்டியன்**

நம் ஒவ்வொருவருக்கும் முகங்கள் வேறு என்றாலும், மொழி ஒன்றுதான்!

உருவங்கள் வேறு வேறு என்றாலும், உணர்வு ஒன்றுதான்!

ஆகவே சொன்ன செய்திகளையே திரும்பத் திரும்ப நானும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதாலும், எனக்குப் பின்னால் இன்னும் பலர் உரையாற்ற உள்ளனர் என்பதாலும், ஒரு செய்தியை மிகச் சுருக்கமாக உங்களோடு பகிர்ந்து கொள்வேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கி 85 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று தன் உரையில் குறிப்பிட்டார் கவிஞர் வைரமுத்து அவர்கள். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு ஏதேனும் முன்னேற்றம் இருக்கிறதா என்று கேட்டால், இருக்கிறது, கண்டிப்பாக இருக்கிறது என்றே கூற வேண்டும்.

முன்பெல்லாம் இந்தி எதிர்ப்பு போராட்டம் தமிழ்நாட்டில் மட்டும்தான் நடக்கும். ஆனால் இன்று நம் முதலமைச்சரின் குரல் கேரள முதலமைச்சரின் குரலாகவும் எதிரொலித்திருக்கிறது. தெலங்கானாவில் இந்தி எதிர்ப்பு முழக்கம் கேட்கிறது. மிகக் குறிப்பாக, மேற்கு வங்கத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஊர்வலத்தில், நம்முடைய பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் படங்களைக் கைகளில் ஏந்தித்தான் அவர்கள் சென்றிருக்கிறார்கள். திராவிட மாடல் இந்தியாவிற்கு வழிகாட்டுகிறது என்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது!

கால மாற்றத்திற்கு ஏற்ப நாமும் நம் போராட்டத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. இது மொழிச்சிக்கல் மட்டுமில்லை, இது ஒரு ஜனநாயகப் போராட்டம்! இது தமிழ்நாட்டிற்கான சிக்கல் மட்டுமில்லை, இந்தியா முழுமைக்குமான போராட்டம்!

ஆகவே “தமிழைக் காப்போம், இந்தித் திணிப்பை எதிர்ப்போம்” என்னும் நம் முழக்கத்தை வேறு மாதிரியாகக் கொண்டு செல்வதே பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது. நம் முழக்கத்தை நான் மாற்றச் சொல்லவில்லை. கொஞ்சம் விரிவாக்க வேண்டும் என்று சொல்கிறேன்.



> “அவரவர் நாட்டில் அவரவர் தாய்மொழி, அடுத்தவரோடு தொடர்பு கொள்ள ஆங்கிலம்! முழக்கம் இதுதான், நம் மொழிக் கொள்கை இதுதான், இந்தியாவிற்கு உதவக்கூடிய கொள்கையும் இதுதான்!”

இந்தியா முழுமைக்கும் பொருத்தமாக நம் முழக்கத்தை ஆக்க வேண்டுமெனில், “தாய் மொழியைக் காப்போம், எம்மொழித் திணிப்பையும் எதிர்ப்போம்” என்று எடுத்து வைத்தால் அந்த முழக்கம், இந்தியாவில் உள்ள எல்லா மக்களுக்கும் பொருந்தும்! இது ஜனநாயகத்தின் குரலாகத் திசையெங்கும் ஒலிக்கும்! நாம் நமக்காக மட்டும் போராடவில்லை, நாட்டில் உள்ள அத்தனை மொழி பேசும் மக்களுக்காகவும் போராடுகிறோம்!

நாம் எடுத்திருக்கும் இருமுமொழிக் கொள்கையே இந்தியாவை முன்னேற்றும்!

அவரவர் நாட்டில் அவரவர் தாய்மொழி, அடுத்தவரோடு தொடர்பு கொள்ள ஆங்கிலம்! முழக்கம் இதுதான், நம் மொழிக் கொள்கை இதுதான், இந்தியாவிற்கு உதவக்கூடிய கொள்கையும் இதுதான்!

எதிர்காலத்தைச் செழிப்பாக்கும் இதனை நாடெங்கும் பரப்புவோம்! இந்தி எதிர்ப்புப் போராட்டம் இந்தியா எங்கும் பரவட்டும்! என்றும் ஜனநாயகம் தழைக்கட்டும்!

நன்றி: **முரசொலி**

**(26-10-2022 அன்று வள்ளுவர் கோட்டம் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட உரையின் ஒரு பகுதி)**

# இங்கிலாந்துப் பிரதமரும் இந்தியப் பார்ப்பனர்களும்

மா.உதயகுமார்



இங்கிலாந்து நாட்டின் பிரதமராக அண்மையில் இந்திய வம்சாவளியைச் சார்ந்த ரிஷி சுனக் பொறுப்பேற்று இருக்கிறார். இதைத் தொடர்ந்து இந்தியாவில் பலவிதமான கருத்துகள் சொல்லப்பட்டு வருகின்றன.

மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் இந்தியாவில் இருந்து பிழைப்புக்காக வெளியேறி, ஆப்பிரிக்கா சென்று அங்கு இந்தியர்களுக்கு எதிரான படுகொலையில் இருந்து தப்பித்து அகதிகளாக இங்கிலாந்து நாட்டில் அடைக்கலம் புகுந்த குடும்பத்தைச் சார்ந்த ஒருவர், இன்று இங்கிலாந்தின் பிரதமர் ஆகியிருக்கிறார். அவர் வெள்ளை நிறத்தைச் சாராதவர். இந்து மதத்தைச் சார்ந்தவர். சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர். இங்கிலாந்தில் இந்த அடையாளங்களுடைய ஒருவர் சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை பணியாளாக “domestic servants” மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தார். இன்று மரபுவழி சிறுமான்மையினரான ஒருவர் பிரதமராகியிருப்பது இங்கிலாந்து அடைந்திருக்கும் சமூக அரசியல் மாற்றங்களைக் காட்டுவதாக “The Guardian” செய்தி வெளியிட்டது.

உலக அளவில் வெளியிடப்பட்ட செய்திகளில், பன்மைத்துவம், சிறுபான்மையினருக்கு அதிகாரம், நிறவெறிக்கு எதிரான நகர்வு ஆகிய கருத்துகளைப் பிரதிபலிக்கும் தலைப்புகள் மற்றும் உப தலைப்புகள் இடம்பெற்றன.

இங்கிலாந்து அந்த அளவிற்கு சமூக மாற்றம் அடையவில்லை. இன்னும் நிறவெறி அங்கு வேரூன்றி இருக்கிறது என்றும், அமெரிக்காவில் கருப்பினத்தவரான ஒபாமா அதிபர் பதவியேற்றளவிற்கு எழுச்சியானது இல்லை என்றும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் இந்தியாவில் ஆர் எஸ் எஸ் - சங்பரிவார் அமைப்புகளைச் சார்ந்தவர்கள், “நம்மை ஆண்டவர்களை நாம் ஆளுகிறோம்” என்பது போன்ற கருத்துகளைச் சொல்லி வருவதைப் பார்க்க முடிகிறது. “இது தாண்டா இந்திய மாடல் Revenge” என்றும் இங்குள்ள பார்ப்பனர்கள் செய்திகள் வெளியிட்டு வருகின்றனர்.

சில இந்திய ஆங்கில ஊடகங்கள், ரிஷி ராஜ்ஜியம் என்பதாகச் செய்தி வெளியிட்டார்கள். அதாவது ‘ரிஷி’ என்கின்ற சொல்லின் மூலம் அவர்கள் மறைபொருளாக இந்து மதத்தின் ரிஷிகளைக் குறித்தனர்.

அகதியாய்ச் சென்ற இந்திய வம்சாவளியைச் சார்ந்தவர் இங்கிலாந்து பிரதமராவதை, அப்படியே நேரெதிராக, இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியர் ஆட்சியல் அமர்வதைப் போல் சித்தரித்து இப்படி வீண் பெருமை எதற்காகப் பார்ப்பனர்களால் பேசப்படுகிறது?

உலகில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளையும் எப்படி தங்களுடைய பார்ப்பனிய ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள, திரித்துப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். தகவல் தொழில்நுட்பம் வளர்ந்த இன்றைய காலகட்டத்திலேயே கொஞ்சம்கூடக் கூச்சமே இல்லாமல் உலக அளவிலான ஒரு செய்தியைப் பொய்யாகத் திரித்து அவர்களால் வெளியிட முடிகிறது என்றால், கடந்த காலங்களில் எவ்வளவு பொய்களை வரலாறாக்கியிருப்பார்கள்?


இந்தியாவை வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆட்சி செய்துவிடுவார்கள், சிறுபான்மை இஸ்லாமியர்கள் ஆட்சி செய்துவிடுவார்கள் என்பது போன்ற பிம்பத்தை ஏற்படுத்தி அரசியல் செய்யும் பார்ப்பனர்கள், தற்போது இன்னொரு நாட்டில் ‘இந்து’ ஒருவர் பிதமாகியிருப்பதைக் கொண்டாடுவது, அவர்கள் எதற்கும் வெட்கப்படமாட்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

தான் ஒரு இந்து என்பதை வெளிப்படையாக அறிவித்துக்கொண்ட ஒருவர் இங்கிலாந்தில் பிரதமர் ஆகியிருப்பதை இங்குள்ள பார்ப்பனர்கள் கொண்டாடுவதை நாம் வெறும் செய்தியாகக் கடந்து போக முடியாது. அதிகாரம் எங்கெங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் பார்ப்பனியம் முடிந்த அளவிற்கு எவ்வளவு தரம் தாழ்ந்த செயல்களைச் செய்தும் அருகே சென்றுவிடும்.

இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த போது, முதலில் அவர்களிடமிருந்து ஆங்கிலத்தையும், கல்வியையும், அறிவியலையும் கற்றுக்கொண்டது பார்ப்பனர்கள்தான். அவர்கள்தான் முதன்முதலில் பல்வேறு மேற்கத்திய நாடுகளில் சென்று குடியேறினர். இன்று அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் அதிகார வர்க்கத்திற்கு அருகில் அமர்ந்து கொண்டு சனாதனத்தை, பார்ப்பனியத்தைப் பரப்பி வருகின்றனர். இங்கு செயல்பட்டு வரும் சங் பரிவார அமைப்புகளுக்குப் பெரும் பொருளுதவி செய்து வருகின்றனர்.

ரிஷி சுனக் இங்கிலாந்து பிரதமராகியிருக்கிறார். இங்கிலாந்து பொருளாதாரம் வளர்ச்சியடையுமா என்பது தெரியவில்லை. ஆனால் ஆர்.எஸ்.எஸ் பொருளாதாரம் ஒளிமயமாகத் தெரிகிறது.

## பா.ஜெயப்பிரகாசம் மறைந்தார்



கரிசல் காட்டு மண் தந்த, முற்போக்குச் சிந்தனையாளர், மிகச் சிறந்த எழுத்தாளர், தோழர் சூரிய தீபன் என்னும் பா. ஜெயப்பிரகாசம் அவர்கள் அண்மையில் மறைந்த செய்தி அறிந்து மிகுந்த வேதனைக்கு உள்ளானோம். அவருடைய எழுத்துகள் என்றும் வாழும்! தமிழ் கூறு நல்லுலகிற்கு அவை வழிகாட்டியாய்த் திகழும்! தோழருக்கு நம் இறுதி வணக்கம்!!

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அண்ணாமலையின் வாய்ச்சவடால் !

அரசியல் கட்சியின் தலைமையில் இருக்கும் அண்ணாமலை, ஆடு, ஆடு என்று ஆடவும் கூடாது, கோணிப் புளுகன் கோயபல்ஸ் போலப் பேசவும் கூடாது, நாகரீகம் இல்லாமல்.

1937ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரையும் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் களத்தில் வலிமையாக நின்று கொண்டு இருக்கிறது தி.மு.கழகமும், அதன் ஆட்சியும்.

தி.மு.க தமிழை வளர்க்கவில்லை அழிக்கிறது என்றும், ஆங்கிலத்தைத் திணிக்கிறது என்றும் அண்மையில் கொஞ்சமும் கூச்சமும், நாணயமுமின்றிப் பேசியிருக்கிறார் அவர்.

தி.மு.கழகத்திற்கு அண்ணாமலையின் ‘சர்ட்டிபிக்கட்’ ஒன்றும் தேவையில்லை. வேண்டுமானால் அமித் ஷாவிடம் போய் அவர் கேட்டு வாங்கிக் கொள்ளட்டும்.

சமஸ்கிருதம் கலந்த மணிப்பிரவாள மொழிநடையில் இருந்த தமிழைச் செந்தமிழாக மீட்டது தி.மு.கழகம்.

வடநாட்டு இந்தி வெறியர்களின் ஆதிக்கக் கொட்டத்தை அடக்கித் தமிழைத் தமிழ் நாட்டின் அரியணையில் அமர வைத்தது தி.மு.கழகம்.

அறிஞர் அண்ணாவின் அழகு தமிழும், நாவலரின் நல்ல தமிழும், கலைஞரின் கனிந்த தமிழும், பேராசிரியரின் பொதிகைத் தமிழும், அவர்களின் எழுத்தும், பேச்சும் என்று எதுவும் தெரியாத அண்ணாமலையின் வாய்ச்சவடால் உப்புக்கும், புளிக்கும் கூட உதவாது.

ஆங்கிலம், அறிவியல் உள்ளிட்ட உலக அறிவைத் தருகிறது என்பது கூட அந்த ‘மேதாவி’க்குத் தெரியவில்லை.



தி.மு.கழகத்தின் நிலைப்பாடு, அண்ணாவின் இருமொழிக் கொள்கை மட்டும்தான்.

தமிழ்நாட்டில் தமிழும், ஆங்கிலமும் இணையாகத் தான் இருக்குமே ஒழிய, இந்திக்கு அவை இடம் தராது.

இருட்டுக்குள் பூனை உருட்டுவது போல அண்ணாமலை, இனியும் ‘உருட்டாமல்’ இருக்க வேண்டும் தமிழ்நாட்டில்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை


இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408



## அதற்குப்பேர் ‘சுதந்திர’மா?

**செந்தலை ந. கவுதமன்**

மற்றை இனத்தார்முன்
மண்டியிட்டால் வாழ்வுண்டாம்!
பெற்றமொழி அழிந்தால்தான்
பெயர்மறந்து திரிவோமாம்!

இந்திக்குக் கால்கழுவி
எட்டப்பப் பணிபுரிய
வந்திடுவீர் என்கின்றார்
வழிக்கல்லும் எமக்கென்றார்

வடநாட்டில் தமிழருக்கு
வழிசொல்ல நாதியில்லை
இடம்தெரிந்து குடியேற
இந்திக்குத் தமிழ்நாடாம்!

பாவிகளா பலமொழிக்கும்
பழைய ‘சதி’ விறகடுக்கி
ஆவியினைப் பறிப்பீரா ?
அதற்குப்பேர் ‘சுதந்தர’மா ?

உன்தாய்க்கு உள்ளஉடை
உடுத்தட்டும் என்தாயும் !
தன்தாய்க்கு அரியணையைத்
தந்திடட்டும் எம்தமிழன் !

(முகநூல் பக்கத்திலிருந்து)

## பொறுப்பாளர்கள் நியமனம்

### திராவிட நட்புக் கழகம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர், ‘திராவிட நட்பு’க் கழகழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மாவட்டப் பொறுப்பாளர்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் விருதுநகர் மாவட்டத் தலைவராகத் தோழர் இராவணன், மாவட்டச் செயலாளராக தோழர் ராஜேஸ் ஆகியோரும், இராணிப்பேட்டை மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அமைப்பாளராகத் தோழர் இரா. தமிழ்வாணனும் நியமிக்கப்படுகிறார்கள்

**சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்

# ‘நாகபுரி’ நோக்கி ஒரு சிற்றுலாப் பயணம்!

**சாரதா தேவி**

எதேச்சையாக பேராசிரியர் தோழர் ஒருவர், “ஒரு ட்ரிப் போகிறோம் நாக்பூருக்கு! வருகிறீர்களா?” எனக் கேட்டார். அண்ணல் அம்பேத்கரின் யுகப் புரட்சி நடந்தேறிய பூமி ஆயிற்றே! அதுவும் அதே அக்டோபர் மாதம்! ஒரு ஆண்டுக்கு மேலாக யோசித்துப் பலரிடமும் கேட்டு நிறைவேறாத ஒரு விருப்பம், இப்படி திடுப் என்று கையில் வந்து விழுமா?! சரி என்று உடனடியாகச் சொல்லியானது. 3 குடும்பங்கள், ஒரு இளைஞர் குழு என்று மொத்தம் 18 பேருடன் ஒரு அருமையான பயணம்! வாருங்கள்! சேர்ந்தே போவோம்...

இந்தியாவின் நடுமத்தியில், அதாவது கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என எல்லாத் திசைகளிலிருந்தும் நட்ட நடுவில், ‘சுழி’யம் மைலில் அமைந்திருக்கும் ஒரு நகரம்தான் நாக்பூர். அதன் காரணமாகத்தான் இந்துத்துவவாதிகள் அவர்களின் தலைமையிடமாக நாக்பூரைத் தேர்ந்தெடுத்தனர். கூடுதலாக, இந்தியாவின் தொல்குடி மக்களான நாகர்கள் பெயரால் அறியப்பட்ட மண் என்பதாலும் தன் மதமாற்ற நிகழ்வுக்கு அந்த நகரத்தைத் தெரிவு செய்திருந்தார் அம்பேத்கர்!

சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி வழியாக, ஆந்திரம், தெலுங்கானாவைக் கடந்து 18 மணி நேரத்தில் வந்தது நாக்பூர்! இரயில் நிலையக் கோபுர முகப்பே அண்ணலின் சிந்தனையில் தோய்ந்த நகரம் என பறைசாற்றுகிறது!

புதைக்கப்பட்ட பௌத்தம் உயிர்த்தெழும் காட்சிகளாக வெண்கலச் சிலைகளும், விகார்களும், பயண வழி எங்கும் நிறைந்திருந்தன. ஒவ்வொரு விகாரும் அண்ணலின் கனவைத் தாங்கி இருந்தது. நாங்கள் தங்கிய கிறித்துவ மய்யத்தின் பேராயரின் பேச்சிலும் அக்கனவே ஆயுதமாக மின்னியது! சிறிதும் நேரவிரயமின்றி நாங்கள் உலகத்தின் இரு பெரும் சிந்தனையாளர்களின் தடங்களையும், தடயங்களையும் கண்ணுறக் கிளம்பினோம்! முதலில் அம்பேத்கர் அவர்கள் மதமாற்றத்துக்கு முன் தங்கியிருந்த ‘சிச்சோலி’யைக் கண்டோம்! கோபிகாபாய் என்ற பெண் 11 ஏக்கர் பரப்பளவில் சாந்திவனம் எனும் நிலத்தை அம்பேத்கருக்கு நன்கொடை அளித்திருந்தார்! அம்பேத்கரின் உதவியாளர் நானக்சந்த் ரட்டு அவர்கள் ஒப்படைத்த அண்ணல் பயன்படுத்திய பொருள்களைக் காட்சிப் படுத்தியிருந்தார்கள். பெரும்பாலானவை ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த குழுவிடம் இரசாயனப் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டிருந்தன. அவற்றின்



ஒளிப்படங்கள் காணக் கிடைத்தன. அவருடைய பேனாக்கள், மூக்குக் கண்ணாடிகள், கோட்டுப் பொத்தான்கள், மேசை, நாற்காலிகள், அவருடைய உணவுப் பாத்திரங்கள் என ஒரு அறிவரின் எளிய வாழ்வின் வரலாற்று நினைவுகளை அவை நமக்குக் கடத்தின! அண்ணல் வரைந்த கண் திறந்த மண்ணின் புத்தர் ஓவியத்தை அங்கு கண்டோம்! அண்ணல் பௌத்தம் ஏற்கையில் வைக்கப்பட்டிருந்த 1 ½ அடி கண் திறந்த புத்தர் சிலையையும் அருங்காட்சியகம் தன்னகம் வைத்திருக்கிறது!

மாநில, ஒன்றிய அரசுகளிடம் இருந்தும், பவுத்த சங்கத்திலிருந்தும் பணம் ஒதுக்கப்பட்டுச் சாந்திவனம், பெரியார் உலகம் போன்று ஓங்குதாங்கான பல்கட்டடப் பெருவெளியாக உருவாக இருக்கிறது என்று அங்கிருந்த புத்த பிக்கு- நாகராஜன் என்ற தமிழர் – நமக்கு விளக்கினார். அதில் அம்பேத்கர் அருங்காட்சியகம், 2000 பேர் அமரும் பெரும் மாநாட்டு மண்டபம், பௌத்த கல்வி மற்றும் பயிற்சி மய்யம், விடுதி, நூலகம் ஆகியவை வர இருப்பதாக அவர் தெரிவித்தார். இறுதியில் நிதியும் கொடுத்து, உயிரையும் கேட்டார்கள், நிதியைத் திருப்பி அனுப்பி, அவர்களையே கட்டிக் கொடுக்கச் சொல்லிவிட்டேன் என்றாரே பார்க்கலாம்! இந்துத்துவ அரசின் நிதியால் பௌத்தம் மீண்டுமொருமுறை தோற்காமல் இருப்பதாக!

அங்கேயே ரோட்டி-ஜூன்கா, சாவல்-பைங்கன் சப்ஜி என பகல் உணவை முடித்த பின் நேரே நாகலோகா எனும் அம்பேத்கரின் மற்றொரு கனவுலகத்தை அடைந்தோம். அம்பேத்கரின் கனவில் அவரை நோக்கி நடந்து வந்த புத்தரை அங்கே மெய்சிலிர்க்கும் வகையில் சிலைகளாக வடித்திருந்தார்கள்! மய்யத்தில் உயர்ந்தோங்கி புத்தர் நடந்து வர, அவருடைய இடப்பக்கத்தில் அம்பேத்கர் அவரைப் பார்க்கும் விதமாக சிலைகள்! அதே வளாகத்தில், ஒரு புத்த விகாரும், பல்வேறு பவுத்த பட்ட, பட்டயப் படிப்புகளை வழங்கும் நாகர்ஜூனா பௌத்த கல்வி மய்யமும் அமைந்துள்ளன!

அதன் பின்னர் க்ஹயிரியில் இருந்த இலங்கை பவுத்த விகாருக்குச் சென்றோம்! அங்கு சிங்கள மொழியில் புத்த வணக்கங்களைச் சொன்னார் ஒரு துறவி! உயிரோட்டமான ஓவியங்களால் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கியது அந்த விகாரின் மேல்தளம்!

சீனக் கட்டட முறையிலும் பராமரிப்பிலும் இருந்த ட்ராகன் பேலஸ் எனும் புத்த விகாரையும் அடுத்து கண்ணுற்றோம்! மிகப் பெரிய அகண்ட தூய்மையான கட்டடத்தில், சுற்றி புல்வெளியும் வண்ண விளக்குகளும், நீர் ஊற்றுகளும் களிப்பூட்ட, பேரமைதியின் இடையே சீன இசைக் கருவிகள் இசைத்து புத்த வணக்கம் நிகழ்ந்தது! அச்சூழலின் அடர்த்தியை ரசித்துத் திரும்பினோம்.

மறு நாள், அண்ணல் 10 லட்சம் தொண்டர்களுடன் பவுத்தம் ஏற்று உரை நிகழ்த்திய தீட்சா பூமியைக் கண்டு வந்தோம்! சாஞ்சி ஸ்தூப வடிவ முகப்பும், குவிமாட வடிவிலான கோபுரமும் வட்ட வடிவ அரங்கில் மய்யத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணலின் அஸ்தியும், ஒரு புத்தர் சிலையும், அங்கு பல்லாயிரக் கணக்கில் வந்த வண்ணமிருந்த தொண்டர்களும் 1956இல் அண்ணல் நடத்திய பெரும் புரட்சியைக் கண்முன் கொண்டுவந்தனர்.

16 ஆண்டுகளுக்கு முன்பு,ஒரு வங்கி அலுவலராக, அங்கு வரும் மக்களுக்கு தண்ணீரும், குளிர்பானங்களும், திண்பண்டங்களும் எடுத்துக்கொண்டு சங்க நிர்வாகிகளோடு சென்றிருக்கிறேன்! அப்போது வாடிய முகங்களோடு, பசித்த களைத்த வயிறுகளோடு இருந்த மக்கள் இப்போது கொஞ்சம் தெம்போடும், தெளிவோடும் இருப்பது சற்று நிம்மதி அளித்தது!

ஜெய்பீம் என்று வணக்கம் வைத்த மராட்டியத் தோழர்கள், ஜெய்ஸ்ரீ ராம்களைத் தோற்கடிப்பார்களா? அண்ணலின் கனவை நிறைவேற்றுவார்களா?

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian